**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.302/2019

**20.09.2025**

**P.W.1- படிவு**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1வது பிரதிவாதியின் தகப்பனார் பிச்சைத்தேவர் 26.06.1959ல் புல எண்.14/1ல் 2 1/4 சென்டும், புல எண்.15/9சி யில் 1/2 சென்டும் படிவு (எ) மாஞ்சிபடிவு என்பவரிடம் கிரையம் பெற்றார் என்றால் இல்லை. அவ்வாறு கிரையம் பெற்ற சொத்தில் தான் பிச்சைத்தேவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. புல எண்.14/1 கிழக்கேயும், புல எண்.15/9 மேற்கேயும் அருகருகே உள்ள நிலங்கள் என்றால் சரிதான். நல்லுத்தேவர் 1974ம் ஆண்டு காலமானார் என்றால் சரிதான். நல்லுத்தேவருக்கு புல எண்.14/1 மற்றும் புல எண்.15/9 என இரண்டிலும் பூர்வீக சொத்து இருந்தன என்றால் சரிதான். 23.07.1975ல் நல்லுத்தேவர் இறந்த பின்பு நானும், பிச்சைத்தேவரும் ஒப்பந்த பத்திரம் மூலமாக சொத்துக்களை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அவ்வாறு பிரிக்கும்போது புல எண்.15/9ல் இரண்டு வீடுகள் இருந்தது என்றால் சரிதான். புல எண்.14/1 காலிமனையாக இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்த பத்திரத்தின்படி நானும், பிச்சைத்தேவரும் ஒதுக்கிய சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் புல எண்.15-9ல் இருந்த இரண்டு வீட்டையும் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஒதுக்கப்படவில்லை, என் அனுபவத்தில் உள்ளது. மேற்படி இரண்டு வீட்டிற்கும் பட்டா இல்லை. மேற்படி இரண்டு வீட்டிற்கும் எனது பெயரில் வீட்டு வரி ரசீதுகள் மற்றும் மின் இணைப்புகளும் உள்ளன. மேற்படி இரண்டு வீடுகளையும் 1975 ஒப்பந்த பத்திரத்தின் படி நான் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். புல எண்.15/9ல் உள்ள இரண்டு வீடுகள் எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு நான் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு புல எண்.15/9ல் உள்ள இரண்டு வீடுகளை

ஒதுக்கியதால் புல எண்.14/1ல் உள்ள 11.90 சென்டு உள்ள காலிமனையை பிச்சைத்தேவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிராதில் நல்லுத்தேவருக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்திற்கும் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 25.02.1986ல் பிச்சைத்தேவர் காலமானார் என்றால் இறந்து விட்டார், தேதி தெரியாது. மேற்படி பிச்சைத்தேவர் இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுகள் பாண்டி மற்றும் முனியம்மாள் ஆகியோர்களுக்கு வாரிசுரிமைப்படி கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். புல எண்.14/1ற்கு பாண்டி மற்றும் முனியம்மாள் பெயரில் பட்டா (பட்டா எண்.764) வழங்கப்பட்டது என்றால் தெரியாது. 23.05.2015ல் பாண்டியும், முனியம்மாளும் 2ம் பிரதிவாதிக்கு புல எண்.14/1ல் கண்ட சொத்தை பொறுத்து ஒரு தான பத்திரம் எழுதி வைத்தார்கள் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தான பத்திரத்தில் கண்ட சொத்தை அடைந்து அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் வழக்கிற்காக மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தான பத்திரத்திற்கு பிறகு புல எண்.14/1ல் கண்ட சொத்திற்கு 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியாது. புல எண்.14/1ல் உள்ள வீட்டிற்கும் 2ம் பிரதிவாதி பெயரில் வீட்டு வரி ரசீது வழங்கப்பட்டது என்றால் தெரியாது. முறையான விசாரணையில்லாமல் புல எண்.14/1ல் உள்ள பட்டாவில் எனது பெயரை சேர்த்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. பட்டாவில் முறையாக விசாரணை செய்யாமல் எனது பெயரை சேர்த்துக்கொண்டதால் 2ம் பிரதிவாதி உசிலம்பட்டி, ஆர்டிஓவிடம் மனு கொடுத்து, மேற்படி மனுவின் விசாணையின் உத்தரவில் எனது பெயரை பட்டாவிலிருந்து நீக்கிவிட்டார்கள் என்றால் இருக்கும். புல எண்.14-1ல் கண்ட சொத்தில் நான் வில்லங்கம் செய்ய முற்பட்டதால் 2ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP No.17935/2018 என்ற நீதி பேராணை மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மீண்டும் 2ம் பிரதிவாதி,1ம் பிரதிவாதி பெயரில் 27.06.2019ம் தேதியில் தானப்பத்திரம் எழுதி பதிந்து வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளை துன்புறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் உரிமையில்லாத சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்கள் அனைத்தும் பிரிக்கப்பட்டதை மறைத்து நான் தாக்கல் செய்த வழக்கு சட்டப்படி

நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.20 17:59:23 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.